# பசுமை கண்துடைப்பு






Kanniyakumari Nature Foundation

## இந்த பாடத்தில் என்ன கற்று கொள்ள போகிறோம் ?

| | |
|---|---|
| | பசுமை கண்துடைப்பு என்றால் என்ன ? |
| | பசுமை கண்துடைப்பு ஏன் செய்யப்படுகின்றது ? |
| | பசுமை கண்துடைப்பு எவரால்  செய்யப்படுகின்றது ? |
| | பசுமை கண்துடைப்பு செய்வதை எப்படிக் கண்டறியலாம்? |
| | பசுமை கண்துடைப்பு ஏன் மோசமானது? |
| | பசுமை கண்துடைப்பு எடுத்துக்காட்டுகள் |

# பசுமை கண்துடைப்பு என்றால் என்ன ?

இயற்கைக்கு பாதகமான ஒரு பொருளையோ , செயலையோ இயற்கைக்கு உகந்தது என்று தவறாக விளம்பரப்படுத்துவது பசுமை கண்துடைப்பு என்று அழைக்கப்படும். பொதுவாக நிறுவனங்கள் லாபம் ஈட்டுவதற்காக இந்த யுக்தியை கையாளுவார்கள்.

# பசுமை கண்துடைப்பு எவரால் செய்யப்படுகின்றது ?

பல நிறுவனங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பை விளம்பர உத்தியாக மட்டுமே பயன்படுத்துகின்றன. விற்பனை பொருளே சூழலியலுக்கு எதிரானது என்றாலும், அதை பேசுவதை தவிர்த்து சூழலியல் சார்ந்த முன்னெடுப்புகளைச் செய்வதாக பல நிறுவனங்கள் காட்டிக்கொள்கின்றன. கடலில் எண்ணெய் சிந்தி மாசுபடுத்தும் எண்ணை நிறுவனங்கள் கடல் உயிரினங்களை பாதுகாக்க நிதியுதவி வழங்குவது, பசுமை திட்டங்களில் பங்கெடுப்பது ஆகியவை சில எடுத்துக்காட்டுகள்.

நெகிழிக்கு பதில் காகித பையை உபயோகிப்பது நல்லது என்று நம் அனைவருக்கும் தெரிந்ததே. அரசாங்க ஆணைபடி கடைகளில் நெகிழி பையை நிறுத்திய உடனே, நிறுவனங்கள் அதை பயன்படுத்தி துணி பைகளை வியாபார நோக்குடன் விற்க ஆரம்பத்து விட்டன. இதில் விசேஷம் என்னவென்றால் நமது உபயோகத்தில் நெகிழி குறையவில்லை மாறாக நெகிழியால் மூடப்பட்டிருக்கும் பொருட்களை இப்பொழுது நாம் மேலும் ஒரு பையை கொண்டு வாங்கி செல்கிறோம்.

இதில் ஒன்று மட்டும்தான் மாறியுள்ளது . நிறுவனங்கள் நாம் இயற்கை மேல் வைத்துள்ள அக்கறையை பயன்படுத்தி லாபத்திற்காக ஒரு பையை நமக்கு விற்று விட்டுவிட்டார்கள் .





இயற்கையை காப்பாற்ற நாம் எடுக்கும்
அனைத்து முயற்சிகளும்
வியாபாரத்திற்குள்ள வாய்ப்புகளாக
நிறுவனங்கள் மாற்றிவிடுகின்றன.
இதனால் நிறுவனங்கள்
விளம்பரத்தின் மூலமாக அவர்கள்
உற்பத்தி செய்யும் எந்த பொருளையும்
இயற்கை பொருளாகவே
சித்தரிக்கின்றன.




Kanniyakumari Nature foundation

பச்சை நிறத்தில் இருப்பதனால் மரத்தில் இருந்து நேராக கிடைத்தது  போல தோன்றுவதற்காக நிறுவனங்கள் இந்த யுக்தியை கையாளுகிறார்கள் . உண்மையில் இவை எல்லாம் ரசாயன பொருட்களே !!!

பசுமை கண்துடைப்பு நிறுவனங்களால் மட்டுமல்ல , நமக்கு நாமே செய்து கொள்கிறோம்.

நம்மில் பெறும்பாலோருக்கு இயற்கை அழிகிறதே என்று வருத்தம் உள்ளது, அதற்கு நம்மால் என்ன செய்ய முடியும் என்று யோசிப்போம். மனிதர்களால் தானே இவ்வளவு இயற்கை அழிவு என்ற குற்றஉணர்ச்சியினால் நமது அன்றாட பழக்கவழக்கங்களை மாற்ற முயல்கிறோம் .



இயற்கையை காப்பாற்ற நாம் நிறைய கடினமான வாழக்கை மாற்றம் செய்ய வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல் எளிதான மற்றும் சிறிதான மாற்றங்களை மற்றும் செய்துவிட்டு நம் கடமை முடிந்துவிட்டது என்று எண்ணிக் கொள்கிறோம்.



உதாரணத்திற்கு நெகிழி கோப்பைகளை தவிர்ப்பதற்காக காகித கோப்பைகளுக்கு மாறினோம். உண்மையில் மரத்தை வெட்டி செய்யப்படும் காகித கோப்பைகள் சூழலியலுக்கு நல்லது என்று நமக்கு நாமே கூறிக் கொள்கிறோம் .

# பசுமை கண்துடைப்பு செய்வதை எப்படிக் கண்டறியலாம்

| | |
|---|---|
| **பொருட்கள் பச்சை நிறத்தில் இருக்கும்** | உற்று நோக்கினால் அதில் உபயோகித்திருக்கும் மூல பொருட்கள் ரசாயன பொருட்களாகவே இருக்கும். |
| **இயற்கை சார்ந்த வார்த்தைகள் இருக்கும்** | பொருட்களின் பெயரில் “eco” , “nature”, ”green” என்று வார்த்தைகள் அடங்கி இருக்கும். |
| **அட்டை , துணி பைகளில் முடக்கி இருக்கும்** | மறுசுழற்சி செய்யப்பட்ட காகிதங்களால் ஆனது என்பது போன்ற வாக்கியங்கள் இருக்கும். |

# ஒரு இயற்கை சோப்பின் மூலப்பொருட்கள்

காட்டை அழித்து உற்பத்தி செய்யபடும் பாமாயில்.

பெட்ரோல் உற்பத்தி செய்யும் போது வரும் இணைபொருள்

Commodity: Toilet Soap Gr-II, TFM 71%
INGREDIENTS: Sodium Palmate, Sodium Palm Kernelate/Cocoate/Laurate, Sodium Soap of Neem Oil, Aqua, Talc, Perfume, Sodium Chloride, Petroleum Jelly, Melia Azadirachta Leaf Extract, Lauric Acid, Disodium EDTA, Disodium Etidronate, Lanolin, Hard Paraffin, Vitamin E, Glyceryl Monostearate, CI 74260, CI 61565.

நாம் கடைகளில் வாங்கும் அனைத்து சோப்புகளிலும் மூலபொருட்கள் இவ்வாறே உள்ளன . இருப்பினும் கடையில் சென்றால் எவ்வளவு பச்சை நிற சோப்புகளை பார்க்கிறீர்கள் ?

பெட்ரோல் உற்பத்தி செய்யும் போது வரும் இணைபொருள்

இயற்கை நிறத்தை கொண்டுவர உதவும் ரசாயானங்கள் .

# பசுமை கண்துடைப்பு ஏன் மோசமானது?

- இயற்கை மேல் உள்ள அக்கறையை வியாபார வழியில் மாற்றிவிட்டார்கள்.
- இயற்கை பொருட்கள் என்று அவற்றின் விலையை அதிகமாக வைத்து விற்கிறார்கள் .
- இயற்கைக்கு தேவையான அடிப்படை மாறுதல்கள் செய்ய வேண்டிய நேரத்தில் மேலோட்டமான சில மாறுதல்களை செய்தால் போது என்று மனதில் ஏற்றிவிட்டார்கள் .





# பசுமை கண்துடைப்பு எடுத்துக்காட்டுகள்

நாம் அன்றாடம் உபயோகிக்கும் பொருட்களான சோப் மற்றும் தேயிலை  பெரிதளவில் பசுமை கண்துடைப்பு செய்யப்படுகின்றது. ஏனென்றால் இந்த பொருட்களை உருவாக்குவதற்காக நடக்கும் சூழலியல் அழிவு மிக அதிகம். ஆகவே இந்த இரண்டு பொருட்களும் பெரும்பாலும் பச்சை நிறத்தில் பொட்டலம் செய்யப்பட்டிருக்கும்.




Kanniyakumari
Nature foundation

ஓராங்குட்டான் வாழும் மழைக்காடுகளை அழித்து பாம் ஆயில் தயாரிக்க வேண்டிய மரங்களை நடுகிறார்கள். இந்தோனேஷியா , மலேசியா போன்ற நாடுகளில் உள்ள காடுகள் அழிவதற்கு பாம் ஆயில் தயாரிப்பே காரணம். அந்த மாதிரி உருவாகும் பாம் ஆயில் கொண்டு தயாரிக்கப்படும் சோப்புகளை பச்சை நிறத்தில் காட்டி இயற்கைக்கு உகந்தது என்று விளம்பரம் செய்கின்றனர்.

Kanniyakumari Nature foundation

நம் ஊரில் உள்ள மழைக்காடுகள் காணாமல் போனதற்கு தேயிலை தோட்டங்களே முக்கிய காரணம். தேயிலை தோட்டங்கள் பச்சையாக காட்சி அளித்தாலும் அவை பல்லுயிர்தன்மை இல்லாத பச்சை பாலைவனங்களே . பல்லுயிர்தன்மை உள்ள காடுகளை அழித்து உருவாகும் தேயிலை தோட்டத்திலிருந்து தயாரிக்கும் தேநீரை பச்சை நிறத்தில் பொட்டலம் செய்தே விளம்பரம் செய்கிறார்கள்.



Kanniyakumari Nature foundation

# விளக்குகளில் ஒரு சுற்றுசூழல் அதிர்ச்சி




| சாதாரண விளக்கு | எல்.இ.டி விளக்கு |
| --- | --- |

இவை இயற்கைக்கு உகந்தது என்று கூறப்பட்டாலும் , நிஜத்தில் சுற்றுசூழலுக்கு தீங்கு தான் விளைவிக்கிறது. ஆற்றல் குறைவாக எடுக்கிறது , அதிக வருடம் வேலை செய்யும் என்று கூறப்பட்டது. நடைமுறையில் எல்.இ.டி விளக்குகள் நிறைய வருடம் எரியவில்லை என்று நாம் அறிந்ததே. அதனால் முன்பு சாதாரண விளக்கினால் வந்த கண்ணாடி குப்பைகள் தவிர மின்குப்பைகளும் உருவாகின்றன.



## பொருட்களை தவிர நம் எண்ணங்களும் பசுமை கண்துடைப்பு செய்யப் படுகின்றன

சூரிய தகடு, காற்றாலை, மின்
ஊர்திகள் அனைத்தும்
இயற்கையை காப்பாற்ற வந்த
தீர்வுகள் என்று
பறைசாற்றப்படுகின்றன.

Kanniyakumari Nature foundation




இயற்கைக்கும் இந்த பொருட்களுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா ?



Kanniyakumari Nature foundation




# “ஷெல் “ஒரு பன்னாட்டு எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனம்.

சூழலியலுக்கு ஏற்றவாறு எரிபொருள் செய்வோம் என்று கூறும் "Shell" கம்பெனி உலகளவில் 2018 முதல் 2030 வரை திட்டமிடப்பட்ட உமிழ்வுகளில் 1.5 ° C கார்பன் பட்ஜெட்டில் 1.6% பங்கு வகிக்கிறது.


நைஜீரியா நாட்டில் 2004-ஆம் ஆண்டு ஷெல் நிறுவனம் 23000 லிட்டர் எண்ணையை சிந்தியதால் அவ்விடத்தில் உள்ள நீர்நிலைகளின் நிலைமை
Kanniyakumari Nature foundation

நாம் எந்த பொருட்களை வாங்குகிறோமோ , அதை பொறுத்து தான் அதன் உற்பத்தியும் இருக்கும். அதனால் நாம் பசுமை கண்துடைப்பு செய்யப்பட்டு விற்கும் பொருட்களையோ , இயற்கைக்கு தீங்கு விளைவித்து உருவாகும் எந்த பொருட்களையும் நாம் வாங்க கூடாது. நாம் புறக்கணித்தால் தானாகவே உற்பத்தி நின்றுவிடும், இயற்கையும் வளமாக இருக்கும்.

# நன்றி !!!

www.knf-india.in